FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா

09 June 2017 (14 Ramadan 1438 Hijira)

# "Prescriptions for a good Ramadan"

# "ஒரு நல்ல ரமலானுக்கான கட்டளைகள்"



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

மேலும் ஒருமுறைக் கூட ரமலான் வந்தடைந்திருக்கின்றது. இதன் வருகைக்கு சாட்சி கூறிக்கொள்ள ஒருவருக்கு பாக்கியம் கிடைத்திருந்தால் அது அல்லாஹ்விடமிருந்து அவருக்கு கிடைக்கும் ஒரு மாபெரும் அருளாகும். ரமலான் மாதத்தில் நாம் இந்த உலகில் வாழ்ந்திருக்கவும் இம்மாதத்தில் அளவற்ற அருள்கொடைகளை அனுபவித்துக் கொள்ள ஒரு அடியானுக்கு தெரியாமலிருக்கவும் செய்தால் அவரது வாழ்க்கை அர்த்தமற்றதாக மாறிவிட்டது

என்பதே உண்மை. எவர் ஒருவரும் இந்த மாதத்தை புறக்கணிக்காமலிருங்கள். ரமலான் இஸ்லாமின் நான்காவது தூண் ஆகின்றது. மிக மகத்துவமும் முக்கியத்துவமும் வாய்ந்த ஆராதனையில் ஏற்ப்பட்டுக்கொள்ள வேண்டிய மாதமும், ஏராளமான நன்மைகளைக் கொண்டு நிறைக்கப்பட்டிருக்கும் மாதமுமாகும் இது.

முதலாவது பயன் என்பது இதன் பாலான ஆன்மீக நோக்கமாகும். அதாவது **"தக்வ"** அல்லது இறைவனின் மீதான பயம். ஒரு முஸ்லீம் அல்லாஹ்வின் மீதான பயமும் பக்தியும் அவர் சுயம் தம்மிடம் உருவாக்கி கொள்ள வேண்டும். அதை தொடர்ந்து வரும் நோக்கங்களாவது, அதன்பாலான பொருளாதாரத்துறை ஆரோக்கியத்துறை மற்றும் சமூக விஷயம் போன்றவை. ரமலான் ஒரு ஆராதனை செயலாகும். அதன் பயன் ஒரு தனிப்பட்ட நபருக்கு மட்டுமல்ல மாறாக, ஒரு சமூகத்திற்கோ ஒரு நாட்டிற்கோ மட்டுமாக சுருங்கி கொள்வது மல்ல பின்னவே முழு உலகிற்கும் இதன் பயன் கிடைக்கின்றது. ஒரு சமூகம் நிலைநிற்க வேண்டியது மிக அவசியமாகும். சுமூகமில்லை என்றால் உண்மையான வாழ்க்கையும் உருவாகுவதில்லை. இதை உருவாகிக் கொள்வதற்கு வாழ்க்கைத் திறன் மிக அவசியமானதாகும். ஒரு சமூக நிர்மானித்தலுக்கு ஒவ்வொரு ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்களின் தனிப்பட்ட முறையிலான பங்குண்டு என்பதை ஒவ்வொரு நபரும் உணர்ந்துக் கொள்ள வேண்டும். இஸ்லாமின் போதனைகளை செயல்வடிவில் கொண்டு வருவதற்கான மிக சிறந்த சந்தர்ப்பமாகும் ரமலான் மாதம் என்பதில் சந்தேகமில்லை. முன்மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்கிக் கொள்வதற்கு முற்றிலும் சிறந்த சந்தர்ப்பம். இதன் வாயிலாக கிடைக்கும் சமூகபயன்கள் ஏராளமாகும்.

1. இறையடியார்கள் ஒன்றுக் கொன்றான சகோதரபந்தத்திற்கு இது ஆற்றல் அளிக்கின்றது. வெறுப்பு, பொறாமை, பகை போன்றவைகள் பெரும்பாலான முஸ்லீம்களின் இதயங்களில் குடிகொள்கின்றது இத்தகையான ஒரு சமூகத்திலாகும் நாம் இன்று வாழ்ந்துக் கொண்டிருப்பது. குறுங்குழுவாதம், வேற்றுமை, அபிப்பிராய பேதம் (dissension) போன்றவைகள்யாவும் சிருஷ்டி கர்த்தாவின் கட்டளையாகிய ஒற்றுமையினை இடித்து தூள் தூளாக்கி கொண்டது. **"உங்கள் இந்த சமுதாயம் ஒரேயொரு சமுதாயமே. நானே உங்களின் இறைவன். என்னையே வணங்குங்கள்! அவர்களே தமது காரியத்தில் தமக்கிடையே பிளவுபட்டுள்ளனர். அனைவரும் நம்மிடமே திரும்பி வருவோர்கள்" (21 : 93,94)**

புத்தியை சற்று பயன்படுத்திக் கொண்டால், உங்கள் சிந்தனையையும், பகுத்தறிவு தன்மையையும் சற்று பயன்படுத்திக் கொண்டால், முஸ்லீம்களுக்கு இந்த துன்பநிலையிலிருந்து ஒரு நல்ல நிலையில் பரிணமித்துக் கொள்ள முடிந்துவிடும். சகோதரத்துவம் மேலும் வென்றுக் கொள்வதனால் மட்டுமே அந்நிலையை அடையமுடிவது. அவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டிய ஒரேயொரு கருத்து என்பது **"ஒற்றுமையை மட்டுமே அல்லாஹ் விரும்புகின்றான்**

**என்றும், அபிப்பிராய பேதத்தை (dissension) அவன் வெறுத்துக் கொள்கின்றான் என்றும்(அவர்கள் உணர வேண்டும்”“Allah loves Unity and hates dissension”.**

முஸ்லீம்கள் யாவரும் ஐக்கியத்துடன் இணைந்துக் கொள்ளாத காலம் வரையில், இதயங்களிலிருந்து இழந்துபோன சகோதரத்துவத்தை மேலும் நிலைநாட்டிக் கொள்ளாதவரையில், இந்த சமுதாயத்தின் மீது அல்லாஹ் தம் கருணையினை பொழியமாட்டான் என்பதை அவர்கள் அனைவரும் உணர்ந்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயமாகும். சகோதரத்துவத்தின் மதிப்பு என்ன என உணராத ஒரு முஸ்லீமுக்கு எவ்வாறு நோன்பு நோற்க்க இயலுவது? அல்லாஹ் கூறியிருப்பதைப் பாருங்கள்

**“நம்பிக்கை கொண்டோர் அனைவரும் சகோதரர்கள் தாம். எனவே உங்கள் சகோதரர்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள் அருள் செய்யப்படுவீர்கள்” (49 – 10)**

2. ரமலான் உயர்ப்பண்புடைமையின் மாதமாகும். தொண்டு செய்து கொள்வதற்காக இம்மாதம் நம்பிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. நிச்சயமாகவும் ஏழைகளாகிய நம் சகோதர – சகோதரிகளின் சுமைகளை நிவாரணம் செய்துக் கொள்தல் என்பது நம் கடமையாகும். அல்லாஹ் அவனது அருட்களை பூமியில் ஒப்புமை இல்லாத நிலையில் வழங்கியிருக்கின்றான். அது (மக்களை) சோதித்துக் கொள்வதற்கேயாகும். சிலர் சிலரை விட செல்வமுடையோராகயிருக்கின்றனர். நோன்பு நோற்பு பசியைக் குறித்தும் தாகத்தைப் பற்றியும் நம்பிக்கையாளருக்கு நினைவூட்டுகின்றது. வறட்சியும் பஞ்சமும் காரணமாக ஏராளமான மக்கள் துயரமடைகின்றனர். அப்பாதிப்புக்கு ஆளாகிக்கொள்ளும் பதினாயிரகணக்கிற்கான மக்கள் அனுதினம் பலியாகின்றனர். அல்லாஹ் ஏராளமான அருட்களை நம்பிக்கையாளர்கள் மீது பொருந்தியிருக்கின்றான் என்ற உண்மையை அவர் உணர்ந்துக் கொள்ளும் போது, தம் நாட்டை சார்ந்த ஏழ்மையான மக்களுக்கு நேராகவே அவரது கரங்கள் கருணையுடன் நீண்டுக் கொள்கின்றது. அது வாயிலாக தூதர் (ஸல்)வின் வசனங்களை அவர் நிறைவேற்றுகின்றார். ரமலான் மாதம் ஆறுதலின் மாதமாகும்.

3. **பாவங்கள் சமுதாயத்தில் மிக மோசமான விளைவை ஏற்படுத்தியிருக்கின்றது. நமக்கு தெரிந்ததைப் போன்றே இஸ்லாம் சூதாட்டத்திற்கு தடை ஏற்ப்படுத்தியுள்ளது. திருட்டுக்கும் தடை ஏற்ப்படுத்தியுள்ளது. லஞ்சத்திற்கும் தடை விதித்துள்ளது. அநீதிக்கும் தடை ஏற்ப்படுத்தியிருக்கின்றது. மது பானத்திற்கும் தடை விதித்துள்ளது. போதை மருந்துகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் தடை ஏற்ப்படுத்தியுள்ளது. மாந்திரீகத்திற்கும் தடை விதித்துள்ளது.** (உதாரணமாக சில நேரங்களில் வேலை செய்யும் இடத்திலாகலாம் அல்லது வேறு இடங்களிலாகலாம் திருமணம் முடித்துக்

கொண்டோர்களாகயிருந்தும் சில ஆட்கள் பிறரின் மனைவிகளிடம் நெருங்கிய பந்தத்தை வைத்துக் கொள்ளவும் பின்னர் அது விபசாரத்தின் முதல் கட்டத்தை எட்டிவிடவும் செய்கின்றது. அதைப் போன்றே போலியான நட்புணர்ச்சியை காட்டி பெண்களும் அத்தகையிலான செயல்களில் ஈடுபடுகின்றனர்) சுருக்கமாக கூறினால் அவமானம் விளைவிக்கும் அனைத்து விஷயங்களும் அது தனிப்பட்ட விஷயமாகட்டும், ஏக இறை கொள்கையின்பாலான நம்பிக்கையிலாகட்டும், அவர்களின் குடும்பத்தை சார்ந்த விஷயமாகட்டும், பொதுவாக சமூக விஷயமாகட்டும் இவையாவும் இஸ்லாம் தடை செய்யப்பட்டுள்ளது.

ரமலான் மாதத்தில் முஸ்லீம்கள் நோன்பு நோற்க வேண்டியது, மேல் கூறிய தடை செய்யப்பட்டிருக்கும் அனைத்து விஷயங்களையும் தவிர்த்துக் கொண்டே ஆக வேண்டும். அது தக்வயுடன் ஆக வேண்டும். நோன்பு நோற்பவர் தங்களின் நோன்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் இந்த நோன்பு நோற்பைக் கொண்டு அவர்களுக்கு எந்த ஓர் பயனும் கிடைப்பதில்லை என்று மட்டுமின்றி அனைத்து வித வெகுமதிகளிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

**நோன்பு நோற்பவர் தவறுகளிலிருந்து விலகி நிற்கும் பொழுது சமுதாயம் தூய்மையாக பரிணமிக்கின்றது. சமுதாயம் ஆரோக்கியமுடையதாக மாறிக் கொள்கின்றது. அல்லாஹ்விலிருந்துள்ள பல்வகையான அருட்களுக்கு சமுதாயம் ஆளாகிக் கொள்கின்றது. அபாயங்களிலிருந்தும் சமுதாயம் பாதுகாக்கப்படுகின்றது.** ரமலான் இத்தகையான அநேகம் அருட்களை பெற்றுத்தருகின்ற மாதமாகயிருப்பதால் இந்த மாதத்தில் ஒரு உண்மையான முஸ்லீமாக வாழ வேண்டியது நம் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். நம் சமுதாயத்தின் மதிப்பை உயரச்செய்வதற்கு பிறரின் கரங்களை நாம் உயர்த்திக் கொள்ள வேண்டும். அது வாயிலாக நம் சமூகத்தை ஒன்றிணைந்து, ஆற்றலுடையதாக்கி கொள்வோம். சமுதாயத்தின் ஆற்றல் இழந்து, அது பலவீனமாகி நாட்கள் ஏராளமாகிவிட்டது. ஒற்றுமை, அன்பு, சகோதரத்துவம் என்பதே ரமலானின் உண்மையான மதிப்பு என்பதை பகுத்தறிந்துக் கொள்ள அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக! அவனது கருணையினை நம் மீது பொழியட்டும்! ஆமீன்.

ரமலான் மாதம், மதிப்புக்கப்பாற்பட்ட உயர் தன்மைகளை அளித்துக் கொள்கின்றது. இந்த அருள் நிறைந்த மாதத்தில் எல்லாம் வல்ல இறைவனுக்காக அனைத்தையும் அர்ப்பித்து வாழவேண்டும் என்பது ஒவ்வொரு நம்பிக்கையாளருடையவும் கடமையாகும். நம் முக்கியமான லட்சியம் என்பது அல்லாஹ்வுமாக மிக நெருங்கிக் கொள்ள வேண்டும் என்பதாகயிருக்க எல்லா தடை செய்யப்பட்ட விஷயங்களிலிருந்தும் நாம் விலகி நிற்க கட்டளையிடப்பட்டிருக்கின்றது. இறைவழியிலிருந்து நம்மை அகலச் செய்யும் எந்த ஓர் செயலும் நம்மிடமிருந்து நிகழாமல் இருக்க வேண்டும்.

# What to do?

## என்ன செய்ய வேண்டும்?

**நம் ஆராதனையை மேலும் மேலும் அதிகரிக்க செய்ய வேண்டும். அதாவது நபல் தொழுகைகள், குர்-ஆன் ஓதிக்கொள்தல், அல்லாஹ்விடம் மேலும் மேலும் துவா செய்து கொள்தல், திக்ரே இலாஹில் முழுகியிருக்கல், தஹ்ஜுத் தொழுகைக்காக இரவில் எழும்பிக் கொள்தல், ஏழைகளுக்கு உணவளித்துக் கொள்தல், சொத்துரிமையில்லாதவர்களுக்கு உதவி புரிதல், பின்னோக்கமிருப்பவர்களுக்கு உதவி செய்தல், சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி புரிதல், முடிந்த அளவிற்கு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக நன்கொடை வழங்கி கொள்தல், (பௌதீகமாகவும் ஆன்மீகமாகவும் ஜமா அத்து அளவிலும், உலக அளவில் கூறினால் முழு நாட்டிற்கும் பொதுவில் முழு உலகிற்கும்) தீமையை தடுத்துக் கொள்தல் இத்தகை செயல்களிலும் நாம் ஏற்ப்பட்டுக்கொள்ள வேண்டும். அது எங்காகயிருந்தாலும் சரி! நம் குடும்பச் சூழ்நிலைகளை இஸ்லாமிக நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உன்னதமான அருளுக்குரிய மாதத்தில் மேன்மையடைய குடும்பத்தை சார்ந்த அனைவரையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். இந்த தூய சந்தர்பத்திற்கு (ரமலான்) முன்னுரிமை அளித்துக் கொள்ள நாம் நம் குழந்தைகளுக்கு உதவி புரிய வேண்டும். இந்த மாதத்தின் நற்பலன்களை அவர்களும் பெற்றுக் கொள்வதற்கு, அதன் மீதான ஒரு விருப்பத்தை அவர்களிடம் உண்டு செய்ய வேண்டும்.**

# What is necessary to avoid at all costs?

## அனைத்தையும் தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான விஷயங்கள் யாவை?

அளவிற்கதிகமான தூக்கம் இரவிலும் பகலிலும்! வீணான பேச்சுவார்த்தைகளில் மூழ்கி நேரத்தை செலவு செய்தல், அது பள்ளி வாயிலின் வெளியேயாகயிருந்தாலும் சரி, தெருவிலானாலும் சரி, கடைகளில் வைத்தானாலும் சரி, இன்னும் ஒருவரின் மனைக்குள் வைத்தானாலும் சரி, அல்லது தொலைபேசிவாயிலானாலும், வாட்சப் மூலமாகயிருந்தாலும் சரி, மெசேஜ் வழியானாலும் சரி, சாற்றிங் வழியானாலும் சரி, ஈமெயில் ஆனாலும் சரி இவையாவும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். டிவி யின் முன்னாலிருந்து நேரத்தை செலவிடுவதும் சரியான முறையல்ல. சிறிய ஸ்கிரீனுடைய முன்னாகயிருந்தாலும் பெரிய ஸ்கிரீனுடைய முன்னாகயிருந்தாலும் சரி இவையனைத்தும் நேரத்தை அழித்துக் கொள்பவையாகும். சமையலறையில் நேரத்தை செலவு செய்தல், உங்களின் தேவைக்கு அப்பாலான நிலையில் சமையல் செய்யாதீர்கள். தினமும் சுவைமிக்க உணவுகளை தயாரிக்காமலிருங்கள்! பெண்கள் தங்களின் விலைவாய்ந்த நேரத்தை பாழாக்கிக் கொள்கின்றனர். மட்டுமின்றி அவர்கள் அது மூலமாக சோர்ந்து

போகின்றனர். அனுதினமுள்ள பொருட்கள் வாங்குதலும் நேரத்தை இழக்கச்செய்கின்றது. நம்பிக்கையாளர்களின் நிகழ்வுகளில் இத்தகைய விஷயங்கள் இருக்ககூடாது. குறிப்பாக அல்லாஹ்விடம் மிக நெருக்கம் வைத்துக்கொள்ள விரும்புகின்றோர்கள்! முடிந்த வரையில் சீக்கிரத்தில் எப்படியாவது திருக்குர்ஆனிலிருந்து 30 ஜுசு ஓதி முடித்திட நீங்கள் ஆவேசம் காட்டாமலிருங்கள். அது பயனளிக்கும் முறையிலாக வேண்டும். குர்ஆன் ஓதிக் கொள்ளும் விஷயத்தின்பால் மிக கவனமுடன் இருக்க வேண்டும். விஷயத்தை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் வார்த்தைகளின் உள் கருத்தை உணர்ந்து வாசித்துக் கொள்ள வேண்டும். அவதூறு கூறுவதிலிருந்தும், நேர்மையின்மையிலிருந்தும், பொய் கூறுவதிலிருந்தும் விலகி நிற்க வேண்டும் மட்டுமின்றி நோன்பு நோற்பின் விலையை குறைத்துக் கொள்ளும் மற்றனைத்து செயல்களிலிருந்தும் வெட்கக்கேடான முழு செயல்களிலிருந்தும் அகன்று நிற்க வேண்டும். இவையாவும் வீணானவையாகும். குடும்பப்பிரச்சனைகள் வீட்டின் இஸ்லாமிக சூழ்நிலைகளுக்கு கேடு விளைவிப்பதாகும்.

**இது நம் வாழ்க்கையில் இறுதியான ரமலானா என்பது யாருக்கு தெரியும்?** இவ்வுலகிலிருந்து நாம் விட்டு விலகப் போகின்றோம் என்ற எண்ணத்தோடு நமக்கு இந்த ரமலானில் வாழ்வோம். ஏய் ரமலானே! நவீன வாழ்க்கையை வழங்கிட நீ மேலும் வந்துக் கொள்வாயா. அருள்களால் எங்களை மேன்மையடையச் செய்வாயாக. கட்டுபாடுள்ள இறை நம்பிக்கையாளர்களுக்கு இரட்சிப்பின் வழியை நீ திறந்து தருவாயா! யா! அல்லாஹ் இந்த ரமலானை ஒரு பிரத்தேகமான ரமலானாக பரிணமிக்கச் செய்வாயாக! எங்களை மேலும் மேலும் உன் அருகாமையில் சேர்த்துக் கொள்வாயாக! உன் நிகரற்ற கருணையின் சுவையை இவ்வுலகிலும் நாளை மறுஉலகிலும் எங்களுக்கு அளித்துக் கொள்வாயாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817